# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம், புவியியற்றுறை
### மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
### 2012/2013 (December 2017)

| | | |
|---|---|---|
| **GYS 3213** | புவியியலில் ஆய்வு நுட்பங்கள்<br>(Research Techniques in Geography) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

1) அ. ஆய்வினை வகைப்படுத்தி அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. ஆய்வு என்பது ஒழுங்குமுறையான செயன்முறைகளைக் கொண்டதும், தொடர் படிமுறைகளாக ஒன்றுக்கொன்று தொடர்புபட்டு அமைகின்ற செயற்பாடுடையதுமாகும்" இக் கூற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

2) அ. அளவுசார் ஆய்வு (Quantitative Research) என்பதைன உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. இலக்கிய மீளாய்வுக்கு (Review of Literature) உட்படுத்தப்படுகின்ற மூலங்கள் யாதெனக் குறிப்பிட்டு, இலக்கிய மீளாய்வினை மேற்கொள்ளுகின்ற போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் குறித்து கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

3) அ. ஆய்வில் பயன்படுத்துகின்ற தரவுகளின் வகை, தரவு மூலங்கள் மற்றும் அவை கொண்டிருக்கவேண்டிய முக்கிய பண்புகள் பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. தரவு சேகரிப்பில் மாதிரி நுட்பமுறைகள் எந்தளவுக்கு தரவுகளின் நம்பகத் தன்மையை உயர்த்தப் பயன்படுத்தப்படலாம் என்பதனை உதாரணங்களுடன் ஆராய்க.

(13 புள்ளிகள்)

4) அ. தரவுப் பகுப்பாய்வு என்பதனால் கருதப்படுவது யாது? தரவுப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு புள்ளியியல் நுட்பங்கள் பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. புவியியல்தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு SPSS மற்றும் புவியியல் தகவல் முறைமை (GIS) எந்தளவுக்குப் பங்களிக்கின்றது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(13 புள்ளிகள்)

5) பொருத்தமான ஆய்வுத் தலைப்பு ஒன்றினைத் தெரிவு செய்து, அதற்கான ஆய்வு முன்மொழிவினை (Research Proposal) எழுதுக.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) ஆய்வுப் பிரச்சினைகளும், ஆய்வு நோக்கங்கள்,கருதுகோள்களின் உருவாக்கமும்

ஆ)இலக்கியக் களவும் (Plagiarism), ஆய்வு அறமும் (Research Ethics)

இ)ஆய்வினைத் திட்டமிடலும், வடிவமைத்தலும் (Research Planning and Design)

(12.5x2=25 புள்ளிகள்)